ஓட்டுநர், நடத்துநர்களுக்குப் பயிற்சி வகுப்புகள்

*6343. திரு. பி. என். வல்லரசு:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில போக்குவரத்துப் பேருந்துகளில் பணிபுரியும் ஓட்டுநர், நடத்துநர்களுக்கு பொதுமக்களிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி பயிற்சி வகுப்புகள் நடத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே :

(அ) மற்றும் (ஆ) போக்குவரத்துக் கழகங்களில் வேலைக்கு அமர்த்தப்படும் நடத்துநர்கள் மற்றும் ஓட்டுநர்களுக்கு பணியில் அமர்த்துவதற்கு முன்பே பொதுமக்கள் தொடர்பு குறித்து பயிற்சி அளிக்கப்பட்டு பணியில் அமர்த்தப்படுகின்றனர். பின்னர் பணிபுரியும்போதும் பொது மக்களிடம் இருந்து வரும் புகார்களின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட நடத்துநர்கள் மற்றும் ஓட்டுநருக்குப் பொதுமக்கள் தொடர்பு சம்பந்தமான நினைவூட்டு பயிற்சிகள் மீண்டும் அளிக்கப்படுகின்றன.

9—20 மணி

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நேசமணி போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரியக் கூடிய ஓட்டுநர்கள் எல்லாம் பயணிகளை நீ, நான் என்றுதான் பேசுகிறார்கள். அது மட்டுமல்ல. பட்டிக்காட்டு பெண்மணிகள் பஸ்ஸில் ஏறினால் அவர்களுக்குப் பொறுமையாக பதில் சொல்லாமல் இடை வழியில் தயவு தாட்சண்யம் இன்றி இறக்கி விட்டு விடுகிறார்கள். இந்தக் குறையை அகற்றுவதற்கு அவர்களுக்கு மீண்டும் நல்ல ஆலோசனைகள் வழங்கி அவர்களைச் சீர்திருத்த முனையுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் குறிப்பிட்டது போல் நாம் அவர்களை வேலைக்கு தேர்ந்து எடுத்த உடனே நேரடியாக வேலைக்கு அனுப்புவது இல்லை. அவர்களுடைய பணி சம்பந்தமாகவும், பொது மக்கள் மத்தியில் எப்படி அவர்கள் நடந்து கொள்ளவேண்டும் என்ற அந்த பயிற்சியும் அவர்களுக்குத் தரப்பட்டுதான் போக்குவரத்துக் கழகங்களுக்கு வேலைக்காக அனுப்பப்படுகிறார்கள். இருந்தாலும் அப்படிப்பட்ட குறைபாடுகள் பற்றி பலவிடங்களில் இருந்து அரசுக்கு புகார்கள் வருகின்றன. குறிப்பாக அப்படிப்பட்ட தவறுகள் செய்பவர்களை மீண்டும் திருத்துவதற்குத் தான் அவர்களுக்கு மறுபடியும் பயிற்சி அளிக்கப்படுகிறது

மறுபடியும். தொடர்ந்து அந்தக் குற்றங்களை அவர்கள் செய்வார்களானால் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதை தவிர வேறு வழி இல்லை.

திரு. சா. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில போக்குவரத்துப் பேருந்துகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் பொது மக்களிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று பயிற்சி இப்போது அளிக்கப்பட்டு இருந்தாலும் — உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால் டி.வி.எஸ். பேருந்துகளில் பணியாற்றிய தொழிலாளர்கள் எப்படி நடந்து கொண்டார்களோ, அவர்களே இப்போது பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் பணி புரியக்கூடிய தொழிலாளர்களாக இருப்பதால் பொது மக்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ அப்படி நடந்துகொள்ள வேண்டும். அதற்கான திட்டத்திற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு போக்குவரத்துக் கழகங்களில் ஆங்காங்கு தேவைப்படுகின்ற நேரத்தில் நாம் வேலைக்காக டிரைவர்களையோ, கண்டக்டர்களையோ தேர்வு செய்கிறோம். இப்படிப்பட்ட தேர்வுகளை எல்லாம் அந்தந்தப் போக்குவரத்துக் கழகங்களின் மூலம் தேர்ந்து எடுத்தாலும் இந்தப் பயிற்சி என்கின்ற அடிப்படையில் ஒருமுகப்படுத்த ஏற்கனவே நம்முடைய சாலைப் போக்குவரத்துக் கழகத்தில் பயிற்சிக் கொடுப்பதைப் போல 3 மாத காலம் அல்லது 6 மாத காலம் அவர்களுக்கு டிரைவிங் பயிற்சியோ அல்லது கண்டக்டர்களுக்கான பயிற்சியோ மறுபடியும் கொடுப்பதோடு, பொது மக்களிடத்திலே எப்படி மரியாதையோடு, பண்பாட்டோடு பழக வேண்டும் என்ற பயிற்சியும் கொடுக்கலாம் என்ற ஆலோசனை அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. நாளைய தினம் அதுபற்றி இறுதியாக முடிவு அறிவிக்கப்பட இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பெரும்பாலும் செய்திகள் திருப்பித் திருப்பி இதையே சுற்றி வரும்.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணமாகப் பேருந்துகளில் ஏராளமான பயணிகள் பயணம் செய்கின்றபோது பலதரப்பட்ட குணாம்சங்கள் கொண்ட பயணிகள் இதிலே பயணம் செய்கிறார்கள். எனவே, அவர்களோடு நடத்துனர்கள், ஓட்டுநர்கள் பணியாற்றுகின்றபோது, பல்வேறுவிதமான பிரச்சினைகள் வருகின்றன. அப்படிப் பிரச்சினைகள் வருகின்றபோது ஏதாவது அடி தடி ஏற்பட்டது என்றால் ஒரு குறிப்பிட்ட ரூட்டில் உள்ள பஸ்கள் எல்லாம் முடக்கப்பட்டு மக்கள் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். எனவே, அப்படிப்பட்ட நிலைமைகளை சுமுகமாக முடிக்கும் வகையில்

[1990 ஏப்ரல் 19

அப்படிப்பட்ட பகுதியில் மக்கள் பிரதிநிதிகளையும், அதேபோல் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளையும், நிர்வாகப் பிரதிநிதி களையும் கொண்ட ஒரு நல்லிணக்கக் குழுக்களை அமைத்து அதை சுமூகமாக முடிப்பதற்கு ஒரு ஏற்பாட்டை அரசு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் சென்னையில் பல்லவன் போக்கு வரத்துக் கழகத்தில் இதே மாதிரி பல சம்பவங்கள் தொடர்ந்து அடுக்கடுக்காக நடைபெற்றன. $1\frac{1}{2}$ மாத காலத்திற்கு முன்னால், உடனே சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள், மாணவர் கள் பிரதிநிதிகள், பொதுமக்கள் பிரதிநிதிகள் எல்லோரையும் அழைத்து வைத்துப் பேசியதற்குப் பிறகு ஏதாவது ஒரு இடத்தில் பொது மக்களாலேயோ அல்லது மாணவர்களாலேயோ அல்லது தொழிலாளர்களாலேயோ பிரச்சினை ஏற்பட்டு, ஒரு குறிப்பிட்ட வழித் தடத்தில் ஓடக்கூடிய பேருந்து நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டால் அந்தப் பேருந்தை மட்டும் நிறுத்தி காவல்துறையிடத் திலோ அல்லது போக்குவரத்துக் கழக அதிகாரிகளிடத்திலோ அதுபற்றிப் பேசி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமே தவிர அந்த ரூட்டில் ஓடக்கூடிய எல்லா பஸ்களையும் நடு ரோட்டில் நிறுத்திவிட்டு இறங்கச் சொல்வது என்பது வேண்டத்தகாத வேலை என்பதை சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கு அறி வுறுத்தப்பட்டு இருக்கிறது. தொடர்ந்து சில இடங்களில் அப்படிப்பட்ட காரியங்களைத்தான் செய்வோம் என்று சொன்ன வர்கள் மீதும் இந்தத் துறை நடவடிக்கையும் எடுத்துள்ளது. ஆகவே, மற்ற போக்குவரத்துக் கழகங்களிலும் இதுபோன்ற இடையூறு ஏற்படாது இருக்கின்ற வகையில் மாண்புமிகு உறு பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

9-25 மணி

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே, நடத்துனர்கள் டிக்கட்டுகளை கிழித்துக் கொடுக்கின்றபொழுது எச்சிலைத் தொட்டு தொட்டுத் தான் டிக்கெட்டுகளைக் கிழித்துக் கொடுக்கின்றார்கள். அதனை கைநீட்டி வாங்குகின்ற பயணிகளுக்கு சுகாதாரக் குறைவாகவும் ஒரு அருவருப்பு உணர்ச்சி தோன்றக் கூடியதாகவும் இருக்கிறது, இதனை தவிர்க்கின்ற வகையிலே நம்முடைய போக்குவரத்துக் கழகங்களிலேயாவது ஈரப்பசையுடன் கூடிய கடற்பஞ்சை பேருந்துகளின் கூறையின் மேற்புறங்களில் நெடுக ஒட்டிவைக்கின்ற ஆலோசனையை அரசு ஏற்றுக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தப் பேருந்தில் பயணம் செய்யும்பொழுது இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது என்பது தெரியாது. இருந்தாலும் இத்தகைய புகார் கள் வருமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை அரசு பரிசீலிக்கும்.